சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 6365 / ஈ2/2022, நாள். 07.09.2022.

பொருள் பள்ளிக் கல்வி - பதினோராம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்வி வேலைவாய்ப்பு - வழிகாட்டல் வகுப்புகள் - கால அட்டவணை ஒதுக்கீடு செய்தல் - தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை 1 சென்னை -06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள், ந.க.எண். 019528/எம்/இ1/2022, நாள். 05.09.2022.

பார்வையில் காண் பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து வகை மேல்நிலைப் பள்ளிகளில் பதினோராம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணவ மாணவிகளுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் குறித்து ஒவ்வொரு பள்ளியிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு ஏற்கனவே உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, முதன்மைக் கருத்தாளர்கள் மற்றும் நான் முதல்வன் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அவர்களுக்கு தரப்பட்டுள்ள பயிற்சிக்கேற்ப மாணவர்களுக்கு தேவையான உயர்கல்வி மற்றும் வேலைவாபய்ப்பு தகவல்களை வழங்கவும் உடனிருந்து வழிகாட்டவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் கீழ்க்காணும் அறிவுரைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. கீழுள்ள உத்தேச அட்டவணைப்படி 11,12ஆம் வகுப்புகளுக்கு பாடவேளை ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.
2. உயர்கல்வி வேலைவாய்ப்பு சிறப்பு வகுப்புகளுக்கான புத்தகங்கள் மாணவர்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் வரும் செப்டம்பர் 7, 2022 முதல் வகுப்புகள் ஒதுக்கீடு செய்து தினசரி பள்ளி கால அட்டவணையில் இணைத்து ஆசிரியர்களுக்கு கீழ் காணுமாறு வழங்க வேண்டும்.
3. இணைக்கப்பட்டுள்ள உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி புத்தகத்தின் பாடத் திட்டத்தின்படி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.
4. உயர் கல்விக்கான வழிகாட்டுதல்களை வழங்க இணைய வழியே துறைசார் வல்லுநர்கள் வழங்க இருக்கின்றனர். அந்த ஆலோசனை நிகழ்ச்சிகளை வழங்கப்பட்டுள்ள பாட வேளைகளில் மாணவர்களுக்கு காண்பிக்க வேண்டும்.
5. உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டு வகுப்புகள் பள்ளியின் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம் (HI-TECH LAB) அல்லது திறன் வகுப்பறை(Smart Classroom) அல்லது ஒளிப்படவீழ்த்தி (Projector) அறை ஏதேனும் இருப்பின் அங்கு நடத்தப்பட வேண்டும்.

| S.No | Week/Day | Time Allotted | Class | Group combination of Subjects | Group to Combine Based on subject to be transacted |
|---|---|---|---|---|---|
| 1 | $2^{nd}$ Wednesday | $7^{th}$ &$8^{th}$ Period | XI | All Combinations in I&II Groups | VOCATIONAL / AGRI |
| 2 | $2^{nd}$ Friday | $7^{th}$ & $8^{th}$ Period | XII | All Combinations in I&II Groups | |
| 3 | $4^{th}$ Wednesday | $7^{th}$ & $8^{th}$ Period | XI | All Combinations in III Group | |
| 4 | $4^{th}$ Friday | $7^{th}$ & $8^{th}$ Period | XII | All Combinations in III Group | |

பொறியியல் தொடர்பான வகுப்புகளின் போது $1^{st}$ குரூப் மாணவர்களுடனும் மற்றும் கலைப் படிப்புகள் தொடர்பான வகுப்புகளின் போது IIIrd குரூப் மாணவர்களுடனும் தொழிற்கல்வி (Vocational) IVth Group மாணவர்களை இணைத்து வகுப்புகளை நடத்த வேண்டும் எனவும், மேற்காணும் அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறும் அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்களுக்கு மாவட்டக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்
2. அனைத்து வகை மேல்நிலை பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் , சென்னை மாவட்டம்.

நகல்

கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-03 அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.